தளிர்த் திறன் திட்டம்

# வெற்றியின் விதைகள்

Aparajitha

ஏப்ரல்
2018

26




| பொருள் | பக்கம் |
|---|---|
| வணக்கம்! | 2 |
| சுவடுகள் | 3 |
| எதிரொலிகள் | 8 |


மாநிலங்கள்
6


மாவட்டங்கள்
86


மொழிகள்
3



பள்ளிகள்
22590


மாணவர்கள்
16,94,250

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்


அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி. இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org


செய்திமடல்
தனிச்சுற்றுக்கு மட்டும்

# வணக்கம்!

*16,94,250 மாணவர்களுக்கு 22590 பள்ளிகளின் வழியாக 100 பாடங்களில் 10 வாழ்க்கைத்திறன்களை 6 மாநிலங்களில் 3 மொழிகளில் கற்பித்திருக்கிறது தளிர்த்திறன் திட்டம்! தொழில்நுட்பத்தின் உதவியால் இந்நிலையை இத்திட்டம் எட்டியிருக்கும் வரலாற்றை உங்களோடு பகிர்ந்துகொள்கிறது இவ்விதழின் முதற்கட்டுரை.*

தளிர்த்திறன் திட்டம், நீடித்து நிலைக்கும் மேம்பாட்டின் ஒரு கூறாக இடம்பெற்றிருப்பதையும் மேற்குத்தொடர்ச்சி மலையின் உள்கிராமங்களிலும் தென்தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கல்லூரி ஒன்றிலும் தொடங்கப் பெற்றிருப்பதையும் எடுத்துரைக்கின்றன இவ்விதழின் பிற கட்டுரைகள்.

படியுங்கள். . . உங்களது கருத்துகளை எங்களுக்கு எழுதுங்கள். . . இம்மடலை பிறருக்கும் பகிருங்கள். . . பொறுப்புடைய வருங்காலத் தலைமுறையை வளர்த்தெடுக்கும் பணியில் கைகோர்க்க வாருங்கள்!

தொடர்ந்து உங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*
*மேலாளர்*



*தளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா ஆகிய 6 மாநிலங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது.*



## 9.25 இலட்சம் மாணவர்களின் வாழ்வை இரண்டே நாள்களில் தொட்ட டிம் டிம் தாரே

ஹரியானா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தளிர்த்திறன் திட்டம் பெரும்பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கிறது. இந்த இரு மாநிலங்களில் மட்டும் இரண்டே நாள்களில் 19000 பள்ளிகளில் பயிலும் 9,25,000 மாணவர்களுக்கு 'எடுசாட்' என்னும் கல்விச்செயற்கைக்கோளின் வழியாக தளிர்த்திறன் திட்டத்தின் இந்தி வடிவமான 'டிம் டிம் தாரே'வின் வாழ்க்கைத்திறன் கல்வி வழங்கப்பட்டு இருக்கிறது. செயற்கைக்கோள் வழியாக வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்குவது இந்தியாவிலேயே இதுதான் முதன்முறையாகும்.

> செயற்கைக்கோள் வழியாக வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்குவது இந்தியாவிலேயே இதுதான் முதன்முறையாகும்.




பத்தாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் மதுரையில் 5 பள்ளிகளில் பயின்ற 465 பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த தளிர்த்திறன் திட்டத்தின் வாழ்க்கைத் திறன் கல்வியானது தமிழ், குசராத்தி, இந்தி ஆகிய மும்மொழிகளில் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், ஹரியானா ஆகிய 6 மாநிலங்களில் உள்ள 4190

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காணொளிகளின் வழியாக 2017 திசம்பர் வரை கற்பிக்கப்பட்டு வந்தது. 2018 ஆம் ஆண்டு சனவரியில் தளிர்த்திறன் திட்ட காணொளிகளை 'எடுசாட்' வழியாக ஒளிபரப்ப ஹரியானா மாநில இடைநிலைக்கல்வித்துறை இயக்குநர் திரு இராஜீவ் ரத்தன், ஐ.ஏ.எஸ். ஆணையிட்டார். அதனை உதவி இயக்குநர் திரு நந் கிஷோர், திட்ட அலுவலர்கள் திரு பிரமோத்குமார், திரு பிரியங்கா, திரு சஞ்சய்குமார், பொறியாளர் திரு மேகா கார்க், பொதுமேலாளர் திரு நீரஜ்வர்மா ஆகியோர் 20-01-2018ஆம் நாள் செயற்படுத்தினர். அதன் விளைவாக அம்மாநிலம் முழுவதும் உள்ள 10000 பள்ளிகளில் பயிலும் 2,50,000 மாணவர்கள் 'கொடைகொடுத்துப்பழகுக' என்னும் பாடத்தைப் பயின்றனர். பாடத்தில் இடையிடையே இருக்கும் செயற்பாட்டு நிறுத்தங்களில் மாணவர்கள் பங்கேற்று நடித்தல், அனுபவப்பகிர்வு ஆகியன போன்றவற்றில் பங்கேற்றுக் கற்றனர். அவ்வெள்ளோட்ட முயற்சி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து பிப்ரவரி 24ஆம் நாளில் 'வீணாக்காதிருக்கப் பழகுக' என்னும் பாடமும் மார்ச் 24ஆம் நாள் 'மற்றவர்களின் பொருள்களை மதிக்கப் பழகுக' என்னும் பாடமும் ஒளிபரப்பப்பட்டன.

ஹரியானா

10000
பள்ளிகள்

250000
மாணவர்கள்

3
ஒளிபரப்புகள்



ஹரியானா
(1 வரிசை) முகேஷ், நான்கி, நேகா (2 வரிசை) பரத், இரகும்தீன், விரள், நிதின், அஜீத் (இடமிருந்து வலமாக)

இராஜஸ்தான் மாநில இடைநிலைக் கல்வித்துறை துணை இயக்குநர் முனைவர் இரஞ்சனா சர்மாவின் அனுமதியைப் பெற்று, கேர்வாரா என்னும் சிறுநகரிலுள்ள சுவாமி விவேகானந்தா அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் அப்பள்ளித் தலைமையாசிரியர் திரு தினேஷ் வியாசின் முன்முயற்சியால் டிம் டிம் தாரே வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. அதன் விளைவாக, 2016 ஆம் ஆண்டில் அம்மாநில பள்ளிக்கல்வி அமைச்சக முதன்மைச் செயலாளர் திரு. நரேஷ் பால் கெங்குவார் ஐ.ஏ.எஸ். வழக்கிய ஆணையால் 71 மாதிரிப்

பள்ளிகளிலும் 1340 ஆதர்ஸ் மேல்நிலைப் பள்ளிகளிலும் காணொளிகளின் வழியாகக் கற்பிக்கப்பட்டது. தற்பொழுது மாநில திட்ட இயக்குநர் திரு. ஆனந்தி ஐ.ஏ.எஸ்., டிம் டிம் தாரே பாடங்களை எடுசாட் வழியாக ஒளிபரப்ப முன்முயற்சி எடுத்தார். துணை இயக்குநர் திரு தினேஷ் குப்தா, திரு மகேந்திரகுமார் குப்தா ஆகியோர் அதனைச் செயற்படுத்தினர். அதன் விளைவாக மாநிலம் முழுவதும் உள்ள 9000 பள்ளிகளில் பயிலும் 6,75,000 மாணவர்கள் மார்ச் 23ஆம் நாள் 'பொதுப்போக்குவரத்தை பயன்படுத்திப் பழகுக' என்னும் பாடத்தைப் பயின்றனர். இவ்வொளிபரப்புகளை உற்றுக்கவனித்த கல்வியாளர் ஒருவர், 'சிறந்த உள்ளடக்கத்தை நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப வடிவமைத்து மாணவர்களிடம் கொண்டுசேர்த்தால் கல்வியுலகில் ஒரு பெரும் மாற்றத்தையே உருவாக்கலாம்' என்கிறார்.



குஜராத்
குர்னல், தாவேல், மயூரி, கிருஷ்ணா, அஜித்சிங், வைரல், டேஜஸ், நீலேஸ்
(இடமிருந்து வலமாக)

இராஜஸ்தான்

9000
பள்ளிகள்

675000
மாணவர்கள்

1
ஒளிபரப்பு

இம்முயற்சிகள் அடுத்துவரும் கல்வியாண்டுகளில் தொடர இருக்கின்றன; ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற இருக்கிறார்கள். தற்பொழுது இரு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இம்முயற்சியை வரும் ஆண்டுகளில் பல்வேறு மாநிலங்களுக்கும் விரிவாக்கும் முயற்சியைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆம்! பத்தாண்டுகளுக்கு முன்னர் 5 பள்ளிகளில் தவழ்ந்து, அடுத்தடுத்த ஆண்டுகளில் மெல்ல எழுந்து காணொளிப்பாடமாய் தளிர்நடைபோட்டு, ஒப்பானவர் வழிக் கல்வியாய் விரைந்து நடந்த தளிர்த்திறன் திட்டம், இந்த பத்தாம் ஆண்டில் செயற்கைக்கோள் வழி ஒளிபரப்பு என்னும் பெரும்பாய்ச்சலை நிகழ்த்தி இருக்கிறது. இப்பாய்ச்சலை ஹரியானா மாநில டிம் டிம் தாரே குழுவினரும் குசராத் மாநில டிம் டிம் தாரா குழுவினரும் திரு நிதின் தேசாய் தலைமையில் நிகழ்த்தி இருக்கின்றனர்.

## நிலைத்த மேம்பாட்டுத் திட்டத்தில் தளிர்த்திறன் திட்டம்

இயற்கைவளம், இயற்பொருள்வளம், சமூகவளம், மனிதவளம், பொருளாதாரவளம் ஆகிய மூலதனங்களைப் பெருக்கி நீடித்து நிலைக்கும் மேம்பாட்டை கிராம அளவில் உருவாக்கும் நோக்குடன் சுஸ்லான் கிராம மேம்பாட்டுத் திட்டத்தை அமைப்புகளின் வழியாக, தனது நிறுவன சமூகப் பொறுப்புணர்வுப் பணிகளைச் செயல்படுகிறது சுஸ்லான் பவுண்டேசன் (Suzlon Foundation). தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் இத்திட்டத்தை இமயம் அறக்கட்டளை செயற்படுத்துகிறது. அத்திட்டத்தின் ஒரு கூறான வழியாக மனிதவள மூலதனத்தை மேம்படுத்தும் பணியை அம்மாவட்டங்களில் உள்ள 11 தொடக்கப்பள்ளிகளிலும் 6 நடுநிலைப் பள்ளிகளிலும் அந்த அறக்கட்டளை மேற்கொண்டிருக்கிறது.


ஆசிரியர்களுக்கான பயிற்சி

மனிதவள
மூலதனத்தை
மேம்படுத்தும்
பணியில்
தளிர்த்திறன் திட்டம்

அதன் ஒரு பகுதியாக, அப்பள்ளிகளில் பயிலும் 800 மாணவர்களுக்கு, பள்ளிக்கல்வியோடு வாழ்க்கைத்திறன் கல்வியையும் வழங்க விரும்பிய அறக்கட்டளை தளிர்த்திறன் திட்டத்தை அப்பள்ளிகளில் கற்பிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. எனவே, அப்பணியில் ஈடுபடவுள்ள 34 ஆசிரியர்களுக்கு 2018 பிப்ரவரி 20, 21ஆம் நாள்களில் வாழ்க்கைத்திறன் கல்வியைப்பற்றிய பயிற்சியும் 200 மாணவர்களைக்கொண்டு மாதிரி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

## கல்லூரி மாணவர்களுக்கு தளிர்த்திறன் திட்டம்

தளிர்த்திறன் திட்டம் பள்ளி மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டிருந்தாலும் அதன் உள்ளடக்கம் கல்லூரி மாணவர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதென வல்லுநர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். அதனை வழிமொழிவதைப்போல மதுரை தியாகராசர் கல்லூரியில் தளிர்த்திறன் திட்டத்தைக் கற்பிக்க அதன் செயலர் திரு ஹரி தியாகராசன் விரும்பினார்.

அதற்கான முயற்சிகளில் கல்லூரி முதல்வர் முனைவர் பாண்டியராஜாவும் வேலைவாய்ப்புக்கல்வி அலுவலர் திரு ராஜேசும் ஈடுபட்டனர்.

"கல்லூரி மாணவர்களுக்கும் பொருத்தமானது தளிர்த்திறன் திட்டம்"



தமிழ்நாடு
தியாகராசர் கல்லூரியில் செந்தில்குமார்

அதன் விளைவாக 2018 மார்ச் 19ஆம் நாள் அக்கல்லூரியில் தளிர்த்திறன் திட்டம் தொடங்கப்பட்டது. இளங்கலை பொருளாதாரம் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு 'இலக்கு அமைத்துப் பழகுக' பாடம் நடத்தப்பட்டது.

## மத்திய பிரதேசத்தில் டிம் டிம் தாரே

மத்திய பிரதேச மாநில இந்தூர் மண்டலத்தில் டிம் டிம் தாரே திட்டத்தை மண்டல ஆணையர் திரு சஞ்சய்துபே ஐ.ஏ.எஸ். கடந்த கல்வியாண்டில் தொடங்கி வைத்தார். அதனை சிறப்பாகச் செயற்படுத்த 30-12-2017ஆம் நாள் அம்மண்டலத்திற்கு உட்பட்ட அகர்மால்வா நகரில் ஆசிரியர் பயிற்சி நடைபெற்றது. அம்மாவட்ட ஆட்சியர் திரு அஜய்குப்தா ஐ.ஏ.எஸ். பயிற்சியைத் தொடங்கிவைத்து, இத்திட்டத்தை பள்ளிகளில் மட்டுமல்லாது மாணவர் விடுதிகளிலும் கற்பிக்க வேண்டும் என்றார். 26 ஆசிரியர்களும் 40 மாணவர்களும் பயிற்சியில் பங்கேற்றனர். இதற்காக ஏற்பாட்டை திட்ட அலுவலர் திரு. ஆனந்த் மிஸ்ரா சிறப்பாகச் செய்திருந்தார்.

## குஜராத்தில் ஆசிரியர் பயிற்சி

குஜராத் மாநிலத்தில் டிம் டிம் தாரா தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எனவே, பல பள்ளிகளுக்கு புதிய ஆசிரியர்கள் பணிமாறுதல்களாலும் பணியமர்த்தல்களாலும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கான டிம் டிம் தாரா பற்றிய புத்தொளி பயிற்சி அகமதாபாத், வதோதரா மாவட்டங்களின் 17 வட்டங்களிலுள்ள வட்டார வளமையங்களில் 32 ஆசிரியர் புத்தொளிபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவற்றில் 800 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

# எதிரொலிகள்

வெற்றிகரமாக இராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் தளராது நடைமுறைப்படுத்தும் டிம் டிம் தாரே, மத்தியப்பிரதேசத்திற்குள்ளும் கால்பதித்திருப்பதை இன்ப அதிர்ச்சியாக இருந்தது. ஆரோவில் பள்ளியின் பாடத்திட்டத்தில் தளிர்த்திறன் திட்டம் இணைக்கப்பட்டு அதனை அரவிந்தரின் போதனைக்களோடு ஒப்பிட்டுக் கற்றதை அறிந்து மகிழ்கிறேன். குறிப்பாக, பாலின நிகர்நிலை வகுப்பிற்குப் பின்னர் பெண்குழந்தைகள் மேலும் தன்னம்பிக்கை பெற்றிருப்பதும் ஆண்குழந்தைகள் அதற்கு ஆதரவாக இருப்பதும் மகிழ்வைத் தருகின்றன. தளிர்த்திறன் திட்டம் வழங்கும் பிற பல்வேறு வாழ்க்கைத்திறன்களுக்கு இடையில் இப்பாடம் காலத்தின் தேவையாக இருக்கிறது.

உங்கள் அணியினரின் நற்பணிகளுக்குப் பாராட்டுகள். இப்புத்தாண்டில் இந்தத் திட்டம் இன்னும் அதிகமான குழந்தைகளுக்கும் உண்மையைச் சொன்னால், மதிப்புமிகு பாடங்களிலிருந்து பயன்பெற வேண்டிய பெரியவர்களுக்கும் சென்றடைய நல்வாழ்த்துகள்!

***- மருத்துவர் ஹரிப்ரியா***

*அரவிந்த் மருத்துவமனை, மதுரை.*

குழந்தைகளுக்கான கல்விமுறையை முன்னேற்றும் உங்களின் தொடர்முயற்சியை மிகவும் பாராட்டத்தக்கது.

***- முனைவர் டி.எஸ். இராம்குமார்***

*இயக்குநர், சமூக புனரமைப்பு மையம், நாகர்கோவில்.*

தளிர்த்திறன் திட்டத்தை அதன் தொடக்க நாளிலிருந்து கவனித்துவருகிறேன்; கடந்த இரண்டு ஆண்டுகளில் மேலும் நான்கு மாநிலங்களுக்கு பரவியிருப்பதை அறிந்து மகிழ்ச்சி. இத்திட்டம் இந்தியா முழுவதும் பரவ வாழ்த்துகள்!

***- ஆர். வெங்கட்ராமன்***

*முதுநிலை ஆலோசகர் - ஆர் ஆர் சன்ஸ், மதுரை.*

தளிர்த்திறன் திட்டத்தின் நோக்கங்களை செய்திமடலின் கட்டுரைகள் தெளிவாகக் காட்டுகின்றன. குசராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம், தற்பொழுது ஹரியானாவை அடைந்திருக்கும் நமது "தளிர்த்திறன் திட்டம்" விரைவில் அனைத்து மாநிலங்களுக்கும் பரவும் என நம்புகிறேன்.

***- ஏ.பி.மணிகண்டன்***

*செயலாக்குநர், காம்ஃபி, மதுரை.*